THE HINDU - ENGLISH Dated: 25.12.2024

# Congress moves SC over change in Election Rules

**Amendment restricting public access to CCTV camera footage from polling booths and video recordings of candidates comes after HC order to release materials from Haryana Assembly polls**

The Hindu Bureau
NEW DELHI

The Congress on Tuesday challenged the amendments made to the Conduct of Election Rules of 1961 that restricted the citizens' right to access certain election-related records.

Congress leader Jairam Ramesh moved the top court against the change in the poll rules, which reduces public access to CCTV camera footage from polling booths and video recordings of candidates.

The amendment was made to sub-rule (2) of Rule 93 of the 1961 Rules, which had previously allowed the public to examine papers related to elections without any exception.

## Access limited

Amendment to the Conduct of Election Rules, 1961 limits public access to certain election-related records



- While there was unrestricted access to election-related records earlier, it is now **restricted**. CCTV footage and video recordings are no longer freely available
- While the government has said that the amendment protects the process from **false narratives** or misuse of electronic records, there are concerns that it reduces **transparency** and **accountability** in the electoral process

The amendment, notified on December 20 by the Union Law and Justice Ministry, had restricted access to only certain election records specifically mentioned in the Rules.

Officials have reportedly justified the move, saying it was to protect the poll process from false narratives through misuse or doctoring of electronic records.

However, the amendment came shortly after a Punjab and Haryana High Court direction to the Election Commission to provide an advocate records pertaining to the recent Haryana Assembly election.

The advocate had filed a petition seeking videography, CCTV footage, and copies of Forms 17-C Parts I and II from the Assembly election.

CONTINUED ON
» PAGE 12
HIDE AND SEEK
» PAGE 10

### EC rejects Cong. claims on polls as 'misleading'

NEW DELHI

The Election Commission has rejected as "factually incorrect and misleading" the Congress's claims of "arbitrary deletion" and "subsequent addition" in electoral rolls and ruled out discrepancies in voter turnout data in Maharashtra Assembly election. » PAGE 13

## From Page One

### Congress moves SC over change in Election Rules

"The Election Commission, a Constitutional body, charged with the conduct of free and fair elections cannot be allowed to unilaterally, and without public consultation, amend such a vital law in such a brazen manner. This is especially true when that amendment does away with public access to essential information that makes the electoral process more transparent and accountable. The integrity of the electoral process is fast eroding. Hopefully the Supreme Court will help restore it," Mr. Ramesh posted on social media platform X.

# EC rejects Congress's claims on electoral rolls in Maharashtra

The Hindu Bureau
NEW DELHI



Voters waiting to cast their vote in the Maharashtra Assembly elections. FILE PHOTO

The Election Commission (EC) on Tuesday rejected as "factually incorrect and misleading" the Congress's claims of "arbitrary deletion" from, and "subsequent addition" to, electoral rolls, and ruled out discrepancies in voter turnout data in the Maharashtra Assembly election.

The EC's response came following a complaint filed by the Congress with the poll panel in November in which the party had said that the National Democratic Alliance (NDA) had won 47 of the 50 Assembly seats where there was an "unprecedented increase" in the number of voters by around 50,000 after an "arbitrary" deletion of names from voter lists. It had also challenged the voter turnout data. A delegation of party leaders met the EC on December 3 with the complaints.

In its detailed response on Tuesday, the poll panel said the Congress's claim of the NDA winning 47 of 50 seats where there was an unprecedented increase in voters (more than 50,000) was "factually incorrect and misleading", as only six Assembly constituencies had total additions of over 50,000 electors during the period between the Lok Sabha and Assembly elections. Thus, the NDA winning in 47 seats on this basis does not arise, it said.

Saying that there was no irregular pattern in voter deletions in the State, the EC said that a rule-based process was followed with transparency in preparation of the electoral rolls.

"You will agree that such baseless accusations coming from a national party of high standing creates unnecessary and avoidable doubts and anxiety in the mind of the public, even when the data is publicly available and timely shared with all parties," the EC said.

The poll panel said that it would not be correct to compare 5 p.m. voter turnout data with final polling data.

**On voting turnout**

In a detailed explanation, it said that the trend of voting from the polling station is taken at five intervals – 9 a.m., 11 a.m., 1 p.m., 3 p.m., and 5 p.m. – and published in public domain through the Voter Turnout App on the day of the poll. The officials collate the data through varied mediums and update on the app. The poll body said it was possible that the officials might not get accurate upgraded trends in some cycles of data collection and hence the data has inaccuracies.

THE HINDU
Dated: 25.12.2024

# Hide and seek

## Transparency is key in maintaining the credibility of the election process

The Election Commission of India (ECI)'s explanation on December 24 in response to the Congress party's charges regarding voter turnout data in the recent Assembly elections is unlikely to allay growing concerns regarding the integrity of the election process. It was on December 20, on the recommendations of the ECI, that the Centre had amended the Conduct of Election Rules to restrict public access to poll documents except for those that are specifically mentioned in them. The ECI has also said it does not want to share CCTV footage of the booth, citing privacy and security reasons. This change in the rules happened after the Punjab and Haryana High Court directed the ECI to share all documents related to the Haryana Assembly elections, including CCTV footage, to a private citizen. The court ruled that this was permissible under 93(2) of the Rules which allowed public access to all "papers" which were not specifically barred. The amended rule now says that only those "papers" that are specified in it are open to public inspection. For an institution that is so central to the functioning of democracy, and yet facing an unprecedented challenge to its credibility, less secrecy and more transparency must be the way forward. Sadly, the ECI is falling short on this count, and damaging its own credibility.

Allegations of electronic tampering of voting machines are misplaced and misguided but concerns regarding the conduct of elections – police high-handedness, partisanship of local administration, and voter suppression through various means – are valid. They require a thorough and impartial investigation. Of particular concern is the dramatic rise in voter turnout in the final figures, compared to what was announced at the end of polling time, noticed in recent elections. The ECI may well be right in saying that voters who are in queue at the closing hour get recorded only in the final figures. But the easiest and perhaps the most credible way to establish this claim is to allow wide inspection of the relevant video footage. The ECI has explained that the candidates have access to all documents, papers and records and nothing has been amended in the rules in this regard. It remains unclear how its officials will deal with requests from candidates for records including video footage while the public will face a default denial in most cases. The privacy and security arguments are weak if candidates can access records anyway. In effect, the change in rules does not solve any problem that the ECI says it does, other than time and effort. And it has raised more questions about the ECI's intentions.

DECCAN CHRONICLE Dated: 25.12.2024

# 'Polls integrity eroding': Cong moves SC over poll rule tweak

DC CORRESPONDENT
NEW DELHI, DEC. 24

The Congress on Tuesday moved a writ petition in the Supreme Court challenging the recent amendments to the Conduct of Election Rules, 1961. The party expressed the hope that the apex court will help restore the "fast eroding" integrity of the electoral process.

Last week, the Centre tweaked a rule related to the conduct of election to prevent public inspection of certain electronic documents such as CCTV camera and Webcasting footage as well as video recordings of candidates to prevent their misuse.

AICC general secretary Jairam Ramesh, who filed the petition, said, "The integrity of the electoral process is fast eroding. Hopefully, the Supreme Court will help restore it."

"A writ has just been filed in the Supreme Court challenging the recent amendments to the Conduct of Election Rules, 1961," Mr Ramesh said in a post on X.

He said the Election Commission, a constitutional body charged with the conduct of free and fair elections cannot be allowed to unilaterally, and without public consultation, amend such a vital law in such a "brazen" manner.

"This is especially true when that amendment does away with public access to essential information that makes the electoral process more transparent and accountable," he said.

# CONG WRIT ON POLL CONDUCT RULES

**New Delhi, Dec 28:** The Congress on Tuesday filed a writ petition in the Supreme Court challenging the recent amendments to the Conduct of Election Rules, 1961 and expressed hope that the apex court will help restore the "fast eroding" integrity of the electoral process. The government has tweaked an election rule to prevent public inspection of certain electronic documents such as CCTV camera and webcasting footage as well as video recordings of candidates to prevent their misuse.

TIMES OF INDIA Dated: 25.12.2024

# EC issues point-by-point rebuttal to Cong over Maharashtra result

## Rules Out Any 'Arbitrary' Deletions, Additions In Maha's Electoral Roll

Bharti.Jain@timesofindia.com



**EC explained that the safe deposit and securing of EVMs in the strong rooms being the first priority, the poll turnout data is updated on the app only from 7pm onwards**

**New Delhi:** Election Commission on Tuesday put out a point-by-point clarification dismissing the Congress's concerns regarding the "inexplicable" increase in voter turnout between 5pm and 11.30pm on poll day in Maharashtra and also ruling out any "arbitrary" deletions and additions in the state's electoral roll.

The party had approached EC after its drubbing in Maharashtra polls last month, claiming that the alleged "inconsistencies" had impacted the electoral outcome.

"It is stated upfront that there is no discrepancy whatsoever in the voter turnout," EC said in its 65-page reply to the AICC's law, human rights & RTI department, while adding that the data provided at 5pm on its voter turnout app is only "interim data of approximate voter turnout (VTR) in the constituency/district/state at that point of time". Stating that polling continues for voters queued up at the polling station at 5pm, EC said VTR has to "naturally lag" as it does not account for the actual additional votes polled between 5pm and the close of poll. "Such trends are therefore never a substitute to the final data prepared in statutory Form 17 C at the close of poll ... no change can be made in the VTR after copies of 17C are given at each polling station to authorised agents of the candidates," said EC.

"Considering 5pm data as the final voter turnout or as its closest approximation is merely a misconception," the poll panel underlined, putting out diagrams, charts and FAQs to explain the statutory processes that it asserted are watertight and carried out with full involvement of the political parties. It added that even voter turnout at 11.45pm on poll day may not be final as scrutiny of election papers is done only on the next day.

EC explained that the safe deposit and securing of EVMs in the strong rooms being the first priority, the poll turnout data is updated on the app only from 7pm onwards. "More so because exact voter turnout has already been shared with the agents of the candidates by the presiding officer (in Form 17 C), thus ruling out any possibility of manipulation," said EC.

On the Congress complaint regarding the average addition of 50,000 voters in 50 assembly constituencies (ACs), of which Mahayuti won 47, EC said only six ACs saw over 50,000 additions. It added that the copies of draft rolls as well as claims and objections were provided to the Congress and its representatives "indeed participated in revision of electoral roll at various stages till (its) finalisation". Commenting on its public accusation that 47 seats with allegedly over 50,000 additions were won by Mahayuti, EC said that "such baseless accusations, coming from a national party of high standing, create unnecessary and avoidable doubts and anxiety in the mind of the public, even when the data is publicly available and shared with all parties".

On the Congress's concerns regarding "arbitrary deletions", EC said only an average 2,779 elections per AC were made on account of dead, shifted and duplicate entries, while strictly following the statutory process. As for Congress's demand for making available electoral roll data, EC said two copies of the rolls were provided to the party representatives.

# Cong moves SC challenging tweaks to poll conduct rules

**New Delhi:** Congress has filed a petition in Supreme Court challenging the recent amendments to the Conduct of Election Rules, 1961. In a statement, the party said it hopes that the "fast eroding" integrity of the electoral process will be restored by the apex court.

The move comes in the wake of the controversy that arose, when based on the recommendation of Election Commission, Centre amended Rule 93(2)(a) to restrict the type of "papers" or electronic documents open to public inspection with the aim to prevent misuse of electronic election records. These include CCTV camera and webcasting footage, as well as video recordings of candidates, during the election process.

▶EC rebuts Cong charge on Maha turnout, P 13

In a post on X, Congress general secretary Jairam Ramesh said, "A writ has just been filed in Supreme Court ... Election Commission, a constitutional body, charged with the conduct of free and fair elections, cannot be allowed to unilaterally, and without public consultation, amend such a vital law in such a brazen manner." He said "this is especially true when that amendment does away with public access to essential information that makes the electoral process more transparent and accountable". TNN

HINDU - TAMIL Dated: 25.12.2024

உயர் நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து தேர்தல் ஆணையம் நடவடிக்கை

# இரட்டை இலை சின்னம் குறித்து விசாரணை

**அனைத்து தரப்பினரும் ஆஜராகி விளக்கம் அளித்துள்ள நிலையில்,**

**ஜன.13-ம் தேதி இந்த விவகாரத்துக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

புதுடெல்லி

இரட்டை இலை சின்னம் யாருக்கு என்பது தொடர்பாக பழனிசாமி மற்றும் பன்னீர்செல்வம் தரப்பினரிடமும், பொதுக்குழு தீர்மானங்களை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தவர்களிடமும் தேர்தல் ஆணையம் விசாரணை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 2016 டிச.5-ம் தேதி முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைந்த பிறகு, கட்சியின் தற்காலிக பொதுச் செயலாளராக சசிகலா தேர்வானார். இதையடுத்து, கட்சிக்குள் எழுந்த அரசியல் அழுத்தம் காரணமாக தமிழக முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் ராஜினாமா செய்த நிலையில், பழனிசாமி முதல்வரானார். இந்நிலையில் சசிகலா சொத்துக்குவிப்பு வழக்கில் சிறை சென்றார்.

அதன்பிறகு நடந்த சமரசத்தால் பன்னீர்செல்வமும், பழனிசாமியும் சசிகலாவையும், டிடிவி. தினகரனையும் கட்சியில் இருந்து நீக்கிவிட்டு தங்களுக்குள் கைகோத்தனர். பிறகு இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கடந்த 2022 ஜூலை 11-ம் தேதி நடந்த பொதுக்குழுவில் எடுத்த தீர்மானங்களின் அடிப்படையில் பழனிசாமி அதிமுகவின் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். அதன்பிறகு பன்னீர்செல்வம் உள்ளிட்ட அவரது ஆதரவாளர்கள் அதிமுகவில் இருந்து கூண்டோடு நீக்கப்பட்டனர். இந்த பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எதிர்த்தும், பழனிசாமி பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டதை எதிர்த்தும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகின்றன.

2023-ம் ஆண்டு ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் நேரத்தில் இரட்டை இலை சின்னம் பழனிசாமி தரப்புக்கு வழங்கப்பட்டது. அப்போது, இரட்டை இலை சின்னம் மற்றும் பொதுக்குழு தீர்மானங்களுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம் என்பது நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இந்நிலையில், திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்யமூர்த்தி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "அதிமுகவின் உள்கட்சி விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக்கூடாது" என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரியிருந்தார்.

அந்தவழக்கைவிசாரித்தஉயர் நீதிமன்றம் கடந்த டிச.4-ம் தேதி பிறப்பித்த ஒரு உத்தரவில், "சூர்யமூர்த்தியின் மனு மீது தேர்தல் ஆணையம் 4 வாரங்களில் முடிவெடுக்க வேண்டும் என்றும், அப்போது பழனிசாமி, பன்னீர்செல்வம் மற்றும் இரட்டை இலை சின்னம் தொடர்பாக வழக்கு தொடர்ந்துள்ள மனுதாரர்கள் என அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் கேட்டு ஒரு முடிவுக்கு வர வேண்டும்" என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு இருந்தது.



அதேபோல இரட்டை இலை சின்னம் தொடர்பாக வா.புகழேந்தி அளித்திருந்த மனுவை பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டுமென டெல்லி உயர் நீதிமன்றமும் தேர்தல் ஆணையத்துக்கு அறிவுறுத்தியிருந்தது.

இந்த நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம், சூர்யமூர்த்தி, வா.புகழேந்தி, ராம்குமார் ஆதித்தன், கே.சி.பழனிசாமி ஆகியோர் இதுதொடர்பாக எழுத்துப்பூர்வமாகவும், டிச.23-ல் நேரிலும் ஆஜராகி விளக்கமளிக்க தேர்தல் ஆணையம் நோட்டீஸ் பிறப்பித்தது.

அதன்படி, பழனிசாமி தரப்பில் அதிமுக எம்.பி. சி.வி.சண்முகமும், பன்னீர்செல்வம் தரப்பில் வழக்கறிஞர் பி.ராஜலட்சுமியும் நேரில் ஆஜராகி தங்களது தரப்பு விளக்கத்தை மனுக்களாக அளித்துள்ளனர். சூர்யமூர்த்தி தரப்பில் பழனிசாமி மற்றும் பன்னீர்செல்வம் தரப்பில் அளிக்கப்பட்டுள்ள மனுக்களை தனக்கு வழங்கினால் மட்டுமே அதற்கேற்ப பதிலளிக்க முடியும் என அவகாசம் கோரப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதுதொடர்பாக அதிமுக எம்.பி. சி.வி.சண்முகம் கூறும்போது, "அதிமுகவில் உறுப்பினராகக்கூட இல்லாத சூர்யமூர்த்தி கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக வேட்பாளரையும், இரட்டை இலை சின்னத்தையும் எதிர்த்து எம்ஜிஆர் மக்கள் கட்சி சார்பில் போட்டியிட்டவர். எனவே இரட்டை இலை சின்னம் தொடர்பான அவருடைய மனுவை நிராகரிக்க வேண்டும் எனக் கோரியுள்ளோம். வாதி, பிரதிவாதிகள் தங்களது தரப்பு ஆட்சேபங்களை வரும் டிச.30-க்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அதில் ஆட்சேபங்கள் இருந்தால் ஜன.13-ம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் எனவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது" என்றார்.

ஓ.பன்னீர்செல்வம் தரப்பு வழக்கறிஞரான பி.ராஜலட்சுமி கூறும்போது, "2022 ஜூலை 11 பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சட்ட விதிகளுக்கு உட்பட்டவை அல்ல என்பதாலும் அதுதொடர்பான வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதாலும் தற்போதும் அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் அவர்தான். எனவே இரட்டை இலை சின்னத்தை எங்களுக்கே ஒதுக்க வேண்டும் எனக்கோரியுள்ளோம்" என்றார்.

தேர்தல் ஆணையத்தில் நேற்று தனது வழக்கறிஞர்களுடன் நேரில் ஆஜரான வா.புகழேந்தி அளித்துள்ள மனுவில், "சாதாரண தொண்டன் கூட அதிமுக பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிட முடியும் என்ற வகையில்தான் அதிமுகவை 1972 அக்.17-ல் எம்ஜிஆர் துவக்கினார். ஆனால் அந்த அடிப்படை சட்ட விதிகளில் திருத்தம் செய்து பழனிசாமி தனக்கு சாதகமாக கொண்டு வந்துள்ள தீர்மானங்கள் சட்ட விரோதமானவை.

இதுதொடர்பாக உச்ச நீதிமன்றம் கடந்தாண்டு அதிமுக மற்றும் இரட்டை இலை சின்னம் தொடர்பாக நிலுவையில் உள்ள அசல் உரிமையியல் வழக்குகளில் தான் முடிவு செய்ய முடியும் எனக்கூறியுள்ளது. ஆனால் அதை கருத்தில் கொள்ளாமல் இரட்டை இலை சின்னத்தை பழனிசாமிக்கு ஒதுக்கியது தவறானது. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் 5 ஆண்டுகளுக்கு நீடிக்கும். அந்த பதவிகள் தேர்தல் ஆணைய பதிவேட்டில் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது. எனவே சிவில் வழக்கு நிலுவையில் இருக்கும்வரை இந்த விவகாரத்தில் எந்த முடிவும் எடுக்கக்கூடாது. இரட்டை இலை சின்னத்தை முடக்கி வைக்க வேண்டும்" எனக் கோரியுள்ளார்.

இதேபோல கே.சி.பழனிசாமி, வழக்கறிஞர் ராம்குமார் ஆதித்தன், தேர்தல் ஆணைய படிவங்களில் அதிமுக பொதுச் செயலாளர் என்ற அடிப்படையில் பழனிசாமி கையெழுத்திட அனுமதிக்கக்கூடாது என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளனர்.

இரட்டை இலை சின்னம் யாருக்கு என்பதில் குழப்பம் நீடித்து வரும் சூழலில் ஜன.13-ல் இந்த விவகாரத்துக்கு தேர்தல் ஆணையம் முற்றுப்புள்ளி வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மகாராஷ்டிர பேரவை தேர்தலில் முறைகேடு நடைபெறவில்லை

**தேர்தல் ஆணையம் விளக்கம்**

புதுடெல்லி

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கட்சி அடங்கிய மகா விகாஸ் அகாடி தோல்வி அடைந்தது. இதையடுத்து, இந்த தேர்தலில் முறைகேடு நடந்ததாக தேர்தல் ஆணையத்தில் காங்கிரஸ் கட்சி புகார் செய்திருந்தது. இதற்கு தேர்தல் ஆணையம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

மகாராஷ்டிராவில் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலின்போது, இறுதி வாக்காளர் பட்டியலில் வாக்காளர் பெயர் நீக்கமோ, சேர்ப்போ இஷ்டத்துக்கு நடைபெறவில்லை. வாக்குப்பதிவு சதவீதத்தை பொறுத்தவரை, மாலை 5 மணி நிலவரத்தையும், இறுதி நிலவரத்தையும் ஒப்பிடுவது சரியல்ல. மாலை 5 மணி நிலவரத்தை விட, இரவு 11.45 மணியளவில் அறிவிக்கப்படும் இறுதி முடிவில் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரிப்பது இயல்பானதுதான். வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்தில் வேட்பாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம் வாக்குப்பதிவு விவரங்களைக் கொண்ட சட்டப்பூர்வ படிவம் 17 சி இருப்பதால் உண்மையான வாக்குப்பதிவை மாற்ற முடியாது.

மகாராஷ்டிர தேர்தலில் விதிமுறைகள் வெளிப்படையாக பின்பற்றப்பட்டன. வாக்காளர் பட்டியலில் முறைகேடு எதுவும் நடைபெறவில்லை. தேர்தல் தொடர்பான அனைத்து விவரங்களையும், தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வாறு ஆணையம் தெரிவித்துள்ளது.

DAILY THANTHI
Dated: 25.12.2024

# தேர்தல் விதிகள் திருத்தத்துக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் காங்கிரஸ் வழக்கு

புதுடெல்லி, டிச.25-
தேர்தல் நடத்தை விதிகளில் செய்யப்பட்ட திருத்தத்தை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் காங்கிரஸ் கட்சி வழக்கு தொடர்ந்துள்ளது.

## காங்கிரஸ் வழக்கு

தேர்தல் கமிஷனின் பரிந்துரையின்பேரில், 1961-ம் ஆண்டின் தேர்தல் நடத்தை விதிமுறைகளில் மத்திய சட்ட அமைச்சகம் சமீபத்தில் திருத்தம் செய்தது.

தேர்தல்களின்போது வாக்குச்சாவடிகளில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கேமராக்களின் பதிவுகள், வெப்கேமரா பதிவுகள், வேட்பாளர்களின் வீடியோ பதிவுகள் ஆகியவற்றை பொது ஆய்வுக்கு உட்படுத்த முடியாது என்று அந்த திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

மத்திய அரசின் திருத்தத்துக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தாக்கல் செய்த 'ரிட்' மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:-

தேர்தல்களை நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடத்த பொறுப்பேற்றுள்ள அரசியல் சாசன அமைப்பான தேர்தல் கமிஷன், பொது ஆலோசனை நடத்தாமல், முக்கியமான விதிமுறைகளில் தன்னிச்சையாக திருத்தம் செய்வதை அனுமதிக்க முடியாது.

## நேர்மை

தேர்தல் நடைமுறையை மிகவும் வெளிப்படையாக ஆக்கக்கூடிய அத்தியாவசியமான தகவல்களை பொதுமக்கள் பார்வையில் இருந்து மறைப்பதன் மூலம் இந்த உண்மையை புரிந்துகொள்ளலாம்.

தேர்தல் நடைமுறையின் நேர்மை வேகமாக அழிந்து வருகிறது. நேர்மையை நிலைநாட்ட சுப்ரீம் கோர்ட்டு உதவும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தேர்தல் கமிஷன் பதில்

இதற்கிடையே, மராட்டிய மாநில சட்டசபை தேர்தல் முடிவுகள் தொடர்பாக தேர்தல் கமிஷனில் காங்கிரஸ் கட்சி பல்வேறு புகார்களை தெரிவித்து இருந்தது.

அவற்றுக்கு பதில் அளிக்கும்வகையில், தேர்தல் கமிஷன் நேற்று காங்கிரஸ் கட்சிக்கு ஒரு கடிதம் எழுதியது. அதில், தேர்தல் கமிஷன் கூறி இருப்பதாவது:-

மராட்டிய சட்டசபை தேர்தலில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு முதல், தேர்தல் பணி நிறைவுவரை அனைத்தும் அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன்தான் நடந்தது. தேர்தல் கமிஷன் தன்னிச்சையாக வாக்காளர்களை சேர்க்கவோ, நீக்கவோ செய்யவில்லை.

50 தொகுதிகளில் சராசரியாக தலா 50 ஆயிரம் வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டதாகவும், அவற்றில் 47 தொகுதிகளில் பா.ஜனதா கூட்டணி வெற்றிபெற்றதாகவும் கூறுவது சரியல்ல. 6 சட்டசபை தொகுதிகளில் சேர்த்து மொத்தம் 50 ஆயிரம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். எனவே, 47 தொகுதிகளில் வெற்றி என்ற கேள்வியே எழாது.

## வெளிப்படைத்தன்மை

சட்டசபை தொகுதிகளில் மாலை 5 மணிக்கு பதிவான ஓட்டு சதவீதத்தை இறுதி ஓட்டு சதவீதத்துடன் ஒப்பிடுவது சரியல்ல. ஏனென்றால், ஓட்டுப்பதிவு இறுதி நிலவரத்தை தொகுக்கும்போது, ஓட்டு சதவீதம் அதிகரிப்பது இயல்பானதுதான்.

17சி படிவத்தில் அரசியல் கட்சிகளின் முகவர்கள், ஓட்டுப்பதிவு இறுதி நிலவரத்தில் கையெழுத்திட்டு இருப்பதால் அதை மாற்றுவது சாத்தியமல்ல. அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் விதிமுறைப்படி நடந்தது.

இவ்வாறு தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

### இரட்டை இலை சின்னம் விவகாரம்:

# தேர்தல் கமிஷனில் 2-வது நாளாக விசாரணை

புதுடெல்லி, டிச.25-
அ.தி.மு.க. உட்கட்சி விவகார வழக்குகள் முடிவுக்கு வரும் வரை இரட்டை இலை சின்னத்தை யாருக்கும் கொடுக்கக்கூடாது என சென்னை ஐகோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி, வழக்கில் தொடர்புடைய அனைவரிடமும் இந்திய தேர்தல் கமிஷன் விசாரணை நடத்தி வருகிறது.

இதன்படி டெல்லி தேர்தல் கமிஷனில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையில் வழக்கின் மனுதாரர் மற்றும் எடப்பாடி பழனிசாமி தரப்பினர், ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் நேரில் சென்று விளக்கங்களை சமர்ப்பித்தனர்.

இந்த நிலையில் நேற்று 2-வது நாளாக விசாரணை நடைபெற்றது. இதில் கே.சி.பழனிசாமி, புகழேந்தி மற்றும் ராம்குமார் ஆதித்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். காலை 11 மணிக்கு தொடங்கிய விசாரணை மாலை வரை நீடித்தது.

DINAMALAR Dated: 25.12.2024

# வாக்காளர் பட்டியலில் திருத்தம் 23 லட்சம் பேர் விண்ணப்பம்

சென்னை, டிச. 25–

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும், திருத்தம் செய்யவும், 23 லட்சம் பேர் விண்ணப்பித்து உள்ளனர்.



தமிழகத்தில், அக்டோபர் 29ம் தேதி நிலவரப்படி, 6.27 கோடி வாக்காளர்கள் உள்ளனர். தேர்தல் ஆணைய உத்தரவுப்படி, 2025ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதியை, தகுதி ஏற்படுத்தும் நாளாக வைத்து, வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிகள், கடந்த நவம்பர் 28ம் தேதி வரை நடந்தன.

பட்டியலில் பெயரை நீக்க, 2.69 லட்சம், பெயர் திருத்தம் மற்றும் முகவரி மாற்றத்திற்கு, 1.60 லட்சம் விண்ணப்பங்கள், ஆன்லைன் வாயிலாக வந்துள்ளன.

புதிதாக பெயர் சேர்க்க, 9.22 லட்சம் பேரும், வெளிநாட்டில் உள்ளோர் 18 பேரும், பெயர் நீக்க, 2.81 லட்சம்; திருத்தம், முகவரி மாற்றம் செய்ய, 5.66 லட்சம் விண்ணப்பங்களும், நேரடியாக பெறப்பட்டு உள்ளன.

வரும் ஜன., மாதம் புதிய வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

# தப்புமா அ.தி.மு.க., இரட்டை இலை வரும் 30ல் நிலவரம் தெரியும்

– நமது நிருபர் –

'அ.தி.மு.க.,வின் இரட்டை இலை சின்னம் தொடர்பாக, பழனிசாமி மற்றும் பன்னீர்செல்வம் தரப்பு, மீண்டும் வரும் 30ம் தேதி எழுத்துப்பூர்வமாக விளக்கம் அளிக்க வேண்டும்' என தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது. அதன்பிறகே இரட்டை இலை யாருக்கு என்பது தெரிய வரும்.



## உத்தரவு

அ.தி.மு.க., விவகாரம் தொடர்பாக, உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், இரட்டை இலை சின்னத்தை யாருக்கும் ஒதுக்கக்கூடாது என, சூரியமூர்த்தி என்பவர், தேர்தல் கமிஷனில் மனு அளித்திருந்தார்.

அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படாததால், அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், பழனிசாமி, பன்னீர்செல்வம் உட்பட, அனைத்து தரப்பினர் கருத்துக்களையும் கேட்டு, நான்கு வாரத்திற்குள், இரட்டை இலை சின்னம் தொடர்பாக, முடிவு எடுக்க வேண்டும் என, தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட்டது.

அதைத் தொடர்ந்து, பழனிசாமி, பன்னீர்செல்வம் தரப்பினர் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க, தேர்தல் கமிஷன் நோட்டீஸ் அனுப்பியது.

அதை ஏற்று, பழனிசாமி தரப்பில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், பன்னீர்செல்வம் தரப்பில் வக்கீல் ராஜலட்சுமி, ஆஜராகி விளக்கம் அளித்தனர். சூரியமூர்த்தியும் தனது தரப்பு விளக்கத்தை அளித்தார்.

தேர்தல் கமிஷன் வரும் 30ம் தேதி மீண்டும் பழனிசாமி, பன்னீர்செல்வம் தரப்பினர் ஆஜராகி, தங்கள் விளக்கத்தை அளிக்க உத்தரவிட்டுள்ளது.

அதற்காக இரு தரப்பினரும் எழுத்துப்பூர்வமாக விளக்க மனுவை தயாரித்து வருகின்றனர். அவர்கள் விளக்கத்திற்கு பிறகு, இரட்டை இலை தொடர்பாக, தேர்தல் கமிஷன் முடிவெடுக்கும்.

இந்த சூழ்நிலையில், அ.தி.மு.க.,வில் இருந்து நீக்கப்பட்ட, முன்னாள் எம்.பி., – கே.சி.பழனிசாமி, புகழேந்தி, ராம்குமார் ஆதித்தன், சுரேன் பழனிசாமி ஆகியோர், நேற்று தேர்தல் கமிஷனில் ஆஜராகி, தங்கள் தரப்பு விளக்கத்தை அளித்தனர்.

அதன்பின் கே.சி.பழனிசாமி அளித்த பேட்டி:

ஜெயலலிதா இறந்த போது, அ.தி.மு.க.,வில் அடிப்படை உறுப்பினர்களாக இருந்து, பின் கட்சியில் இருந்து யாரெல்லாம் நீக்கப்பட்டனரோ, அவர்கள் மாற்றுக் கட்சியில் சேராமல் இருக்கும் பட்சத்தில், அவர்கள் அனைவரையும் மீண்டும் அக்கட்சியில் சேர்க்க வேண்டும்.

அதன்பின் அ.தி.மு.க., உட்கட்சி தேர்தலை நடத்தி, பொதுச்செயலரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

## விதிமுறை மாற்றம்

அதுவரை, தற்போது அ.தி.மு.க.,வின் பொதுச்செயலராக பழனிசாமியை தேர்ந்தெடுக்கப்பட்ட முடிவை நிறுத்தி வைக்க வேண்டும் என, தேர்தல் கமிஷனிடம் வலியுறுத்தி உள்ளேன்.

தற்போதைய சூழலில், அ.தி.மு.க., விதிமுறைகளில் மாற்றம் கொண்டு வந்தது தவறு என கூறினால், கட்சி நிறுவனர் எம்.ஜி.ஆரை கூட பழனிசாமி கட்சியிலிருந்து நீக்கி விடுவார்.

இவ்வாறு அவர் கூறினார்.

DINA MALAR
Dated: 25.12.2024

# ரத்து செய்க

## • தேர்தல் விதியை மத்திய அரசு மாற்றியதை...
## • தில்லுமுல்லுக்கு வழி என காங்கிரஸ் வழக்கு

**புதுடில்லி, டிச. 25–**

**'தேர்தல் நடத்தை விதிகளில் மத்திய அரசு திருத்தம் செய்தது தில்லுமுல்லுக்கு வழிவகுக்கும் என்பதால் அதை ரத்து செய்ய வேண்டும்' என, உச்ச நீதிமன்றத்தில் காங்கிரஸ் கட்சி ரிட் மனு தாக்கல் செய்துள்ளது.**

தேர்தல் சம்பந்தமான அனைத்து தகவல்கள், ஆவணங்கள், வீடியோ பதிவுகளையும் பொதுமக்கள் பார்வையிட தேர்தல் நடத்தை விதி அனுமதிக்கிறது.

தேர்தல் நடைமுறை முற்றிலும் வெளிப்படையாக இருந்தால் மட்டுமே, தேர்தல் மீது வாக்காளர்களுக்கு நம்பிக்கை ஏற்படும் என்பதால், 1961ம் ஆண்டு இந்த விதிகள் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தன.

அத்துடன், கட்சிகளோ வேட்பாளர்களோ அல்லது தேர்தல் பணியில் ஈடுபடும் லட்சக்கணக்கான அதிகாரிகளோ முறைகேடு செய்யாமல் தடுக்கவும், இந்த வெளிப்படைத்தன்மை உதவும் என, அப்போது இருந்த தேர்தல் கமிஷன், அரசுக்கு வலியுறுத்தி இருந்தது.

அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, எந்த பிரச்னையும் இல்லாமல், இந்த விதிகள் அமல் செய்யப்பட்டன.

சமீபத்தில் நடந்த ஹரியானா சட்டசபை தேர்தலில் தோல்வி அடைந்த ஒரு வேட்பாளர், தன் தொகுதியின் சில சாவடிகளில் நடந்த ஓட்டுப்பதிவு ஆவணங்களையும், வீடியோ பதிவையும் கேட்டார்; தேர்தல் கமிஷன் தர மறுத்தது; அவர் கோர்ட்டை நாடினார்.

> **தேர்தல் பதிவுகளை தவறாக யாரும் பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கத்துடன், சில மின்னணு ஆவணங்கள், பொதுமக்கள் கைகளுக்கு கிடைப்பது மட்டுமே, இந்த திருத்தத்தின் வாயிலாக, கட்டுப்படுத்தப்பட்டுள்ளது**

தேர்தல் நடத்தை விதிகள் அனுமதிப்பதால், மனுதாரர் கேட்கும் ஆவணங்களையும், வீடியோ காட்சிகளையும் கொடுத்தாக வேண்டும் என, ஐகோர்ட் உத்தரவிட்டது.

இதையடுத்து தேர்தல் கமிஷனை மத்திய அரசுக்கு அவசர பரிந்துரை அனுப்பியது. அதை ஏற்று, மத்திய அரசு, 1961ம் ஆண்டு 'தேர்தல் நடத்தை விதிகள் சட்ட விதி – 93–2 – ஏ'யில் உடனே திருத்தம் செய்து, கடந்த வெள்ளிக்கிழமை அரசாணை பிறப்பித்தது.

'எல்லா ஆவணங்களையும்' என்பதற்கு பதிலாக, 'விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை' என திருத்தி எழுதியுள்ளது.

இதனால், ஓட்டு எண்ணிக்கை நடக்கும்போது ஒவ்வொரு மணி நேரத்துக்கும் சொல்லப்பட்ட எண்ணிக்கைக்கும், கடைசியில் அறிவிக்கப்படும் இறுதி எண்ணிக்கைக்கும் இடையே, முரண்பாடுகள் நேரும்போது, தேர்தல் அதிகாரி அதற்கு என்ன காரணம் அல்லது விளக்கம் கொடுத்தார் என்பது போன்ற முக்கியமான தகவல்களை, பொதுமக்கள் இனிமேல் அறிந்து கொள்ள முடியாது.

இது, இந்திய தேர்தலின் அடிப்படை பலமான வெளிப்படைத்தன்மையை சிதைத்துவிடும் என, ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இந்த கட்டுப்பாடு விதிக்காவிட்டால் ஓட்டு போடுபவர்கள் குறித்த ரகசியத்தை காக்க முடியாமல் போகும்; அதனால் காஷ்மீர் போன்ற, 'சென்சிடிவ் ஏரியா'க்களில் மோசமான விளைவு ஏற்படும் என்று, தேர்தல் கமிஷன் சொல்கிறது.

வீடியோ காட்சிகள், மின்னணு ஆவணங்களை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, முற்றிலும் வேறுமாதிரி சித்தரிக்கும் ஆபத்தும் இருப்பதாக கமிஷன் கூறுகிறது.

அவ்வாறு, தேர்தல் பதிவுகளை தவறாக யாரும் பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கத்துடன், சில மின்னணு ஆவணங்கள், பொதுமக்கள் கைகளுக்கு கிடைப்பது மட்டுமே, இந்த திருத்தத்தின் வாயிலாக, கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்கிறது.

இந்த பின்னணியில் தான், மத்திய அரசு செய்துள்ள திருத்தத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் காங்கிரஸ் கட்சி, ரிட் மனு தாக்கல் செய்துள்ளது.

இது குறித்து காங்., பொதுச்செயலர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தேர்தல் நடைமுறையின் நேர்மை வேகமாக சிதைந்து வருகிறது. அதை மீட்டெடுக்க உச்ச நீதிமன்றம் உதவும் என நம்புகிறோம்.

'சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த வேண்டிய அரசியல்சாசன அமைப்பான தேர்தல் கமிஷன் ஒருதலைப்பட்சமாக, பொது ஆலோசனையின்றி இது போன்ற முக்கிய சட்டத்தை திருத்துவது வெட்கக்கேடானது. இதை அனுமதிக்க முடியாது' எனக் குறிப்பிட்டுள்ளார்.